4th November 1966]

'Village Jeep Journal'

* 398 Q.—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether any project by name "Village Jeep Journal" to convey Farm News to villages has been envisaged to be put through in Thanjavur district; and

(b) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) சபை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

திரு. வை. சங்கரன் : இதனுல் கண்ட பலனை விவரமாகக் கூற முடியுமா? அவ்வாறு நல்ல பலன் விளைந்திருந்தால் நம மாகாணத்திலே மற்ற கிராமங்களுக்கும் இதை விஸ்தரித்து பேஸ்ட் ப்ரொக்ராமாகக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இது பரிட்சார்த்தமாகத்தான் செய்திருக்கிருர்கள். முடிவு பின்னுல்தான் தெரியும். முடிவு தெரிந்து வெற்றிகரமாக இருந்தால் மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்க ஏற்பாடு செய்யப்படும்.

Crop Insurance Scheme

* 399 Q.—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to introduce Crop Insurance Scheme in the State; and

(b) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) இம்மாநிலத்தில் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் இன்னும் செயல்படவில்லை. பயிர் இன்ஷூ-ரன்ஸ் முன்னேடித் திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்குரிய செயற்குறிப்புகளை வேளாண்மைத்துறை நெறியாளர் ஆலோசித்து வருகிருர். தமிழ் நாட்டில் தேர்ந்தெடுத்த சில பகுதிகளில் புன் செய் நிலங்களில் பயிராகும் சோளம், கம்பு, கேழ்வரகு சம்பந்த மாக முதலில் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைச் செயலுக்கு கொண்டுவர இயலுமா என்பதை அறிய புள்ளி விவரங்களைத் திரட்டுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

திரு. வை. சங்கரன் : "காட்டில் இன்ஷூரன்ஸ்" திட்டம் ஆரம் பிப்பதைப்போல் பரிட்சார்த்தமாகவாவது ஒரு பிராந்தியத்தில் இதை ஆரம்பித்து அதனுடைய பலாபலன்களைக் கண்டறிவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பரிட்சார்த்தமாகப் பார்ப்பது என்று சொல்லித்தான் இதை டைரக்டர் அவர்கள் பரிசிலனை செய்து கொண்டிருக்கிருர்கள்; இதை ஆராய்ந்து கொண்டிருக்கிருர்கள்.

---

a 287–288-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

பின்னால் தான் ஒரு முடிவு எடுப்பார்கள். மத்திய சர்க்கார் கூட இந்த பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தை கம்பல்சரியாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : கிராப் இன்ஷூரன்ஸ் திட்டம் சம்பந்தமாக மத்திய அரசாங்கத்திலே இரண்டு மூன்று ஆண்டுகளாகவே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி மேலிடத்திலே உள்ளவர்கள் கூட இது அவசியம் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தும், விவசாயிகள் மாட்டு அக்கறை காட்டுகிறோம் என்று சொல்லிக்கொள்கின்ற அரசாங்கம் இந்தத் திட்டத்தை இவ்வளவு காலதாமதமாக, நிறைவேற்றாமல் வைத்துக் கொண்டிருப்பானேன் ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் சொல்லக்கூடிய கிராப் இன்ஷூரன்ஸ் திட்டம் மத்திய அரசாங்கத்திலே பார்லிமெண்டை சேர்ந்தது 26-ம் தேதி ஜூலை மாதம் 1966-ல் டெப்டி மினிஸ்டர் திரு. மிஸ்ரா அவர்கள் கிராப் இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கம்பல்சரியாகக் கொண்டுவர வேண்டுமென்று பார்லிமெண்டிலே அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் ஒத்துக்கொண்ட பிறகு நாமும் அதைப் பற்றி முடிவுசெய்து கொள்ளலாம்.

திரு. கரு. சீமைச்சாமி : பயிர்ப் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் சம்பந்தமாகப் பரிசிலனை செய்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பரிசிலனை எங்கே செய்கிறார்கள். இங்கே செய்கிறார்களா அல்லது வெளிநாடுகளுக்குப் போய் பரிசீலனை செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கம்பு, கேழ்வரகு இவைபற்றிதான் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். நாம் இங்கே ஆரம்பித்த பிறகு மத்திய சர்க்காரும் ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே, அவர்கள் முடிவுசெய்த பிறகு நாமும் முடிவு செய்யலாம்.

Agricultural College at Thanjavur

* 400 *Q.*—SRI M. D. THIAGARAJA PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal under consideration for the starting of an Agricultural College in Thanjavur district during the Fourth Five Year Plan period, in view of the progress of the intensive cultivation schemes that are being implemented there?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தலைவரவர்களே, தஞ்சை ஜில்லாவிலே 14 லட்சம் ஏக்கர் நஞ்சை விவசாயம் செய்கின்ற இடங்களில், அநேக திட்டங்கள் மூலம் உற்பத்தியைப் பெருக்கு